www.freetnbooks.com

**10 R** Register No. [ ]

# அரையாண்டுத் தேர்வு – 2025

நேரம் : 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 14x1=14

**குறிப்பு (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா
2. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது? அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991
3. i) பாளையக்காரர் முறை காகதீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
ii) கான்சாகிப்பின் இறப்பிற்குப் பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764இல் மீண்டும் கைப்பற்றினார்.
iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.
iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.
அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி
4. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
இ) நேரடி நடவடிக்கை நாள்ஈ) சுதந்திரப் பெருநாள்
5. அரசு அதிகாரிகளைத் தேர்வுசெய்ய ............ நீதிக்கட்சியால் நிறுவப்பெற்றது.
அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
இ)மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்
6. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ...........
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்
7. எந்த ஆண்டு இந்தியாவில் முதல் கால்நடைக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது?
அ) 1919 ஆ) 1939 இ) 1959 ஈ) 1979
8. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்குப் பயன்படும் போக்குவரத்து
அ) சாலைப் போக்குவரத்து ஆ) இரயில் போக்குவரத்து
இ) வான்வழிப் போக்குவரத்து ஈ) நீர்வழிப் போக்குவரத்து
9. தமிழ்நாட்டில் அதிகப் பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் .............
அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு
10. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப்பயிர் ................
அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள் இ) எண்ணெய் வித்துகள் ஈ) நெல்
11. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை
12. இந்தியா தனது மிக நீண்ட எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா
13. நீட்டிக்கப்பட்ட உதவி பெறும் சட்டம் 480-ஐக் கொண்டுவந்த நாடு .............
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து
14. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு ........... வரி விதிக்கப்படுகிறது?
அ) வருமான வரி ஆ) சொத்து வரி இ) நிறுவன வரி ஈ) கலால் வரி

## பகுதி - II

**குறிப்பு: ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்** 10x2=20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

17. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து எழுதுக.
18. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.
19. இந்தியாவின் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
21. இந்தியாவின் சணல் உற்பத்தி செய்யும் முக்கியப் பகுதிகளைக் குறிப்பிடுக.
22. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.
23. கோயம்புத்தூர் ஏன் ''தென்னிந்தியாவின் மான்செஸ்டர்'' என அழைக்கப்படுகிறது?
24. இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. தொழில்முனைவோர் என்பவர் யார்?
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்துத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
28. பனிப்போர் என்றால் என்ன?

## பகுதி - III

**குறிப்பு: ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10x5=50**

29. i) சோட்டா நாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி .................
ii) ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் .............. நகரில் அமைந்துள்ளது.
iii) ஆளுநர் தனது ராஜினாமா கடிதத்தை ............ இடம் கொடுக்கிறார்.
iv) ............ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
V) பருத்தி இழையிலிருந்து விதைகளைப் பிரித்தெடுக்கும் முறைக்கு ............... என்று பெயர்.
30. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு செயல்பாடுகளை ஆய்வு செய்க.
31. பெண்கள் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
32. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
33. வேறுபடுத்துக. a) i) வானிலை மற்றும் காலநிலை
i) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்
b) காரணம் கூறுக - கிராமங்களை விட பெருநகரங்களின் மக்கள்தொகை நெருக்கம் அதிகம்.
34. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.
35. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு பல்நோக்குத் திட்டங்கள் பற்றி எழுதுக.
36. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
37. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. கருப்புப் பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1930 வரையிலான ஐந்து நிகழ்வுகளை எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
1) பாரக்பூர் 2) வேதாரண்யம் 3) மீரட் 4) ஜான்சி 5) பம்பாய்

## பகுதி - IV

**குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்க. 2x8=16**

43. ஆ) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் எவை என்று ஆராயவும். (அல்லது)
ஆ) முதல் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்
1) மகாநதி 2) ஆரவல்லி 3) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை 4) சரளை மண் 5) தேயிலை விளையும் பகுதி ஒன்று 6) பெட்ரோலியம் கிடைக்குமிடம் ஒன்று 7) கிழக்குக் கடற்கரைச் சமவெளி 8) பாரதீப் (அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்
1) காவிரி 2) கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 3) கரும்பு விளையும் பகுதி 4) மன்னார் வளைகுடா 5) சென்னை 6) பவானிசாகர் அணை 7) செம்மண் 8) பழவேற்காடு ஏரி



www.freetnbooks.com | FREETNBOOKS